**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை – லங்கா ஜேமொலொஜிக்கல் லெபோரட்ரி (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை – 2024/2025**

---

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை – லங்கா ஜேமொலொஜிக்கல் லெபோரட்ரி (பிறைவேட்) லிமிட்டெட் ("கம்பனி") 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்பாடுகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். அச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாகவும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் சேர்த்து விதிகளில் வழங்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய நேரத்தில் தயாரித்து சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்த வேண்டியதுடன் இதற்கு மேலதிகமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகளை பராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரச முயற்சிகளுக்கான செயல்வழிக் கோவையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையிலுமான ஆண்டுக்காக பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2 சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம்

கம்பனியால் இறுதியாக தயாரிக்கப்பட்ட 2014 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்களின் விபரங்கள் பின்வருமாறு.

| **நிதிக்கூற்றுக்களின் உருப்படிகள்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| சொத்துக்கள் | |
| நடைமுறைச் சொத்துக்கள் | 139,006,695 |
| **மொத்த சொத்துக்கள்** | **139,006,695** |
| மூலதனம் மற்றும் பொறுப்பு | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கம் | 124,178,950 |
| பொறுப்புகள் | |
| நடைமுறைப் பொறுப்புகள் | 14,827,745 |
| **மொத்த பொறுப்புகள் மற்றும் மூலதனம்** | **139,006,695** |
| மொத்த வருமானம் | - |
| மொத்த செலவினம் | (257,271) |
| **பற்றாக்குறை** | **(257,271)** |

### 2.3 கணக்குகள் மற்றும் புத்தகங்களை பேணுதல்

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவம் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கம்பனியால் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக காசு / வங்கிப் புத்தகம், பேரேட்டுக் கணக்கு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு, நாளேடு மற்றும் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள், புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை உரிய முறையில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 செலுத்த வேண்டிய மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவம் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபையினால் தலைவரினதும் பணிப்பாளரினதும் தாய்லாந்து விஜயத்திற்காக ரூபா 369,440 உம் ஜேர்மன் விஜயத்திற்காக ரூபா 1,032,887 உம் 2014 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2024/25 நிதி ஆண்டு முடிவடையும் போதும் அது தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு விஜயங்களுக்காகச் செலுத்தப்பட்ட பணத்தை தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 கம்பனியை நிறுவுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆய்வுகூடமொன்றை நிறுவும் போது ஏதேனும் ஒரு தனியார் தனிநபர் அல்லது அமைப்புகளுடன் இணைந்துகொள்வது 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணானது என்பதையும், அத்தகைய ஆய்வுகூடமொன்றை நிறுவுவதற்காக ஏதேனும் ஒரு தனியார் தனிநபர் அல்லது அமைப்பிற்கு நிதியை விடுவிப்பது சட்ட ஏற்பாடுகளைத் தீவிரமாக மீறும் செயல் என்பதையும் சட்ட மா அதிபர் 2005 ஆம் ஆண்டில் சுட்டிக்காட்டியிருந்தார். அவ்வாறிருந்தும், அந்த எதிர்ப்பைப் புறக்கணித்து தேசிய இரத்தினக்கல் மற்றும் | பதில்கள் வழங்கப்படவில்லை. | கம்பனியை நிறுவியமையின் சட்டப்பூர்வத்தன்மையை பரிசீலித்து, அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்பட வேண்டும |

ஆபரணங்கள் அதிகாரசபை (NGJA) மற்றும் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணச் சங்கம் (SLGJA) ஆகியவற்றுக்கிடையே எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், இரத்தினக்கற்களின் பெறுமதியை அதிகரிப்பதற்கான சுத்திகரிப்பு மற்றும் இரத்தினக்கற்களின் உருவாக்கத்தை (Origin) தீர்மானிக்கும் வசதிகளைக் கொண்ட இரத்தினக்கல் பரிசோதனைக்கூடமொன்றை நிறுவுவதற்கும், வழங்கப்படும் சான்றிதழ்களுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் இலங்கையில் ஒரு முழுமையான இரத்தினக்கல் ஆய்வுகூடத்தை உருவாக்கும் நோக்கில், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் “லங்கா ஜெமொலொஜிக்கல் லேபோரட்டரி“ எனும் பெயரில் ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக 2008 மே மாதம் 29 ஆம் திகதி இந்த கம்பனி நிறுவப்பட்டிருந்தது.

**3.2 நிதியத்தை நிறுவுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை (NGJA) மற்றும் இலங்கை இரத்தினக்கல் மற்றும் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாமல் கட்டணங்களை அறவிடுவது சட்டப்பூர்வமானது |

ஆபரணங்கள் சங்கம் )SLGJA) ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இரத்தினக்கல் ஏற்றுமதி பெறுமதியின் அடிப்படையில் அதிகாரசபையால் அறவிடப்படும் 0.25 சதவீதமான ஏற்றுமதி சேவைக் கட்டணத்திற்கு மேலதிகமாக 2001 ஆம் ஆண்டின் சனவரி முதல் மேலும் 0.25 சதவீத சேவைக் கட்டணமொன்று அதிகாரசபையின் ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவிடப்பட்டு ‘‘இரசாயன ஆய்வுகூட அபிவிருத்தி’’ நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2009 சனவரி 28 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த நிதியத்திற்கு சேர்ந்த ரூபா 92,498,579 ஆன தொகை 2009 ஏப்ரல் 27 ஆந் திகதி லங்கா ஜெமோஜிகல் லெபோரடரி தனியார் கம்பனியின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்டவாறு மேலதிக சேவைக் கட்டணமொன்றை அறவிடுதல் தொடர்பில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

அல்ல என்பதால், கம்பனிக்கு செலவு வைக்கப்பட்டுள்ள பணம் தொடர்பில் சட்ட அறிவுரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பனியின் கணக்கிற்கு மாற்றப்பட்ட தொகை மற்றும் அதற்கு உரியதாக சேர்ந்துள்ள வட்டி தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் நிதியத்திற்கு மீள மாற்றப்பட்டு அந்த நிதியங்களை மாற்றி அந்த நிதியை பயன்படுத்தி உத்தேச சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் தொழில்நுட்ப ரத்ன வித்யா இரசாயன ஆய்வுகூடம் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 111 ஆம் பிரிவின் கீழ் நிறுவுவதற்கும் 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 08 வருடங்கள் கடந்துள்ள போது அந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க, ஒரு இரத்தினக்கல் ஆய்வுகூடத்தை சட்டப்பூர்வமான முறையில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) கம்பனி 2008 ஆம் ஆண்டின் போது நிறுவப்பட்ட 2025 மார்ச் 31 ஆந் திகதியளவில் 16 வருடங்கள் கடந்திருந்த போதிலும், கம்பனியின் நோக்கங்களை நிறைவேற்ற தவறியிருந்தது. 2019 மே 16 ஆந் திகதியின் பின்னர் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் பணிகளை சட்டரீதியாக நிறைவு செய்தல் தொடர்பில் தீர்மானம் எடுத்து அதற்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கம்பனியின் பணிப்பாளர் சபை கூடியிருக்காததுடன், கம்பனியை தொடர்ச்சியாக செயற்படு நிலையில் பேணிச் செல்லல் அல்லது அவற்றின் பணிகளை முடிவுறுத்துவதற்கு உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை வங்கியால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2025 நவம்பர் 19 ஆந் திகதிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கம்பனிக்கு சொந்தமான 2025 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 255,344,229 ஆன நிலையான வைப்பொன்றுக்கு உரிய புதுப்பித்தல் அறிவித்தல் மற்றும் ரூபா 25,840,283 தொகையான மீதியொன்று நிலவிய நடைமுறைக் கணக்கிற்கு உரியதாக வங்கி இணக்கக்கூற்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வங்கிக் கணக்கு மற்றும் வைப்புகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மேற்படி நடைமுறைக் கணக்கில் நிலவிய ரூபா 25,840,283 ஆன மீதி எந்தவொரு வருமானத்தை வழங்கும் வழியில் முதலீடு | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | காசு மீதியை முகாமை செய்து எதிர்கால பணிகளில் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாது 2015 ஆம் ஆண்டு முதல் வினைவற்றுக் காணப்பட்டது. | | பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கம்பனியால் வருமான வரிக்காக பதிவு செய்திராததுடன், 2014 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டியதாக நிலவிய ரூபா 14,619,695 ஆன வருமான வரி மற்றும் ரூபா 4,784,831 ஆன நிறுத்தி வைத்தல் வரி மீதியும் 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரி ஆகியவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |